டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 26.09.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 083 | Madurai | Online Edition

# தமிழ்நாட்டில் 2026ம் வருடத்திற்கான வடகிழக்குப் பருவமழை மாவட்ட அளவிலான முன்னறிவிப்பு

கோயம்புத்தூர், செப்.25

தமிழ்நாட்டின் மாவட்ட அளவிலான 2026-ம் வருடத்திய வடகிழக்கு பருவமழை முன்னறிவிப்பு (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள பயிர் மேலாண்மை இயக்கத்தின் கீழ் இயங்கும் வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தில் கணிக்கப்பட்டது. இதற்காக ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பசிபிக் பெருங்கடலில் பூமத்திய ரேகையை ஒட்டியுள்ள கடல் மேற்பரப்பு வெப்பநிலை மற்றும் தென்மண்டல காற்றழுத்த குறியீடுஆகியவற்றை உபயோகித்து ஆஸ்திரேலிய ரெயின்மேன் (Australian Rainman International V.4.3 software) என்னும் கணிணி மென்பொருள் மூலம் இந்த முன்னறிவிப்பு உருவாக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 2026ம் ஆண்டின் எதிர்பார்க்கப்படும் வடகிழக்கு பருவமழையளவு 468 மி.மீ ஆகும். இந்த மழையளவு அதன் நீண்டகால சராசரி அளவான 464 மி.மீ ஒத்துள்ளது. தற்போது நிலவும் தென்மேற்கு பருவத்தில் 01.06.26 முதல் 22.09.26 வரையிலும் கிடைக்கப் பெற்ற மழையளவு (254 மி.மீ) நீண்ட கால சராசரியை காட்டிலும் (292 மி.மீ) 13 சதவிகிதம் குறைவாக பெறப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் நீண்டகால சராசரியினை ஒத்த வடகிழக்கு பருவமழையால் இந்த பற்றாக்குறை ஒரளவு சரி செய்யப்பட்டு மண் ஈரப்பதம் மேம்படுவதுடன் நீர்நிலைகளில் நீர் இருப்பும் மேம்பட்டு நிலத்தடி நீரும் உயர வாய்ப்புள்ளது. நிலவும் எல்நினோ நிகழ்வால் பருவமழை பரவலில் வேறுபாடு நிகழ வாய்ப்புள்ளது. கடலோர மாவட்டங்களில் புயலால் தொடர் மழைநாட்களும் உள் மாவட்டங்களில் தொடர் வறண்ட நாட்களும் பெற வாய்ப்புள்ளது.

வடகிழக்கு பருவமழையானது தமிழ்நாட்டின் ஆண்டு மொத்த மழைபொழிவில் 50 சதவிகிதம் பங்கு வகிப்பதால் வேளாண்மை மற்றும் நீர் மேலாண்மையில் முக்கிய பங்காற்றுகிறது.

விவசாயிகள் அதிக மழை கிடைக்கப் பெறும் பொழுது அதிகப்படியான மழை நீரை பண்ணை குட்டைகளில் சேமித்து வறட்சி காலத்தில் நீர்ப்பாசனத்திற்கு உபயோகப்படுத்தலாம். மேலும் குறிப்பாக மானாவாரியில் பயிர் கழிவுகளை கொண்டு பயிர் மூடாக்கு செய்வதுடன் நீரைச் சேமிக்கும் நில வடிவமைப்பு முறைகளைப் பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறது.

நெற்பயிரில் காய்ச்சலும் பாய்ச்சலும் நீர் நிர்வாக முறையை பின்பற்றுவதன் மூலம் நீர் தேவையினை குறைக்கலாம். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கும் வானிலை முன்னறிவிப்பு மற்றும் தானியங்கி வானிலை சார்ந்த வேளாண் அறிவுரையை கைபேசி செயலியினை மூலம் விதைத்தல், நீர்பாசனம் செய்தல் மற்றும் உரம் இடுதல் போன்ற பண்ணை முடிவுகளை எடுப்பதற்கு விவசாயிகள் பின்பற்ற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பாக கன மழை மற்றும் புயல் சமயங்களில் இதுமிக உதவியாக இருக்கும்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

## தமிழ்நாட்டின் வடகிழக்கு பருவமழை முன்னறிவிப்பு - 2026

| வ.எண் | மாவட்டம் | சராசரி மழையளவு (மி.மீ | எதிர்பார்க்கப்படும் மழையளவு (மி.மீ | சதவிகித வேறுபாடு (%) |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 480 | 469 | -2 |
| 2 | செங்கல்பட்டு | 720 | 780 | 8 |
| 3 | சென்னை | 751 | 730 | -3 |
| 4 | கோயமுத்தூர் | 366 | 367 | 0 |
| 5 | கடலூர் | 647 | 626 | -3 |
| 6 | தர்மபுரி | 314 | 311 | -1 |
| 7 | திண்டுக்கல் | 400 | 400 | 0 |
| 8 | ஈரோடு | 314 | 304 | -3 |
| 9 | கள்ளக்குறிச்சி | 445 | 406 | -9 |
| 10 | காஞ்சிபுரம் | 651 | 635 | -2 |
| 11 | கன்னியாகுமரி | 501 | 524 | 5 |
| 12 | கரூர் | 298 | 284 | -5 |
| 13 | கிருஷ்ணகிரி | 285 | 260 | -9 |
| 14 | மதுரை | 422 | 393 | -7 |
| 15 | மயிலாடுதுறை | 910 | 991 | 9 |
| 16 | நாகபட்டிணம் | 849 | 864 | 2 |
| 17 | நாமக்கல் | 319 | 295 | -8 |
| 18 | பெரம்பலூர் | 422 | 400 | -5 |
| 19 | புதுக்கோட்டை | 403 | 368 | -9 |
| 20 | இராமநாதபுரம் | 481 | 462 | -4 |
| 21 | ராணிபேட்டை | 401 | 426 | 6 |
| 22 | சேலம் | 324 | 304 | -6 |
| 23 | சிவகங்கை | 412 | 389 | -6 |
| 24 | தஞ்சாவூர் | 487 | 458 | -6 |
| 25 | தேனி | 360 | 353 | -2 |
| 26 | தென்காசி | 462 | 446 | -3 |
| 27 | திருவள்ளூர் | 561 | 532 | -5 |
| 28 | திருவாரூர் | 653 | 604 | -18 |
| 29 | தூத்துக்குடி | 404 | 392 | -3 |
| 30 | திருச்சிராப்பள்ளி | 376 | 349 | -7 |
| 31 | திருநெல்வேலி | 473 | 446 | -6 |
| 32 | திருப்பத்தூர் | 260 | 238 | -8 |
| 33 | திருப்பூர் | 328 | 306 | -7 |
| 34 | திருவண்ணாமலை | 475 | 446 | -6 |
| 35 | நீலகிரி | 451 | 444 | -2 |
| 36 | வேலூர் | 337 | 308 | -9 |
| 37 | விழுப்புரம் | 508 | 472 | -7 |
| 38 | விருதுநகர் | 399 | 365 | -9 |
| | தமிழ்நாடு | 434 | 438 | 1 |

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**48. பன்னீர் சூப்**

**தேவையான பொருட்கள்**

பன்னீர் — 100 கிராம்

பால் — ½ கப்

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

வெண்ணெய் — 1 டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை**

வெண்ணெயில் பன்னீரை லேசாக வதக்கி பால், தண்ணீர் சேர்த்து கொதிக்கவிட்டு மிளகு, உப்பு சேர்த்து பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# தாளடி பருவத்தில் அதிக விளைச்சல் பெற விதை பரிசோதனை செய்து விதைப்பு மேற் கொள்வீர்!

நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள் தாளடி சாகுபடி செய்ய தயார் செய்து வருகின்ற இந்த தருணத்தில் தங்களுக்கு தேவையான விதைகள் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் விதை விற்பனை நிலையத்திலும் இருப்பு வைக்கப்பட்டடுள்ளது, எனவே விவசாயிகள் அனைவரும் சான்று பெற்ற நல்ல தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும், மேலும் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை பயன்படுத்தும் பொழுது விதைகள் நல்ல முளைப்புத்திறன் உள்ளதா?என பரிசோதனை செய்து கொள்வது மிகவும் அவசியமான ஒன்றாகும்,

விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள விதை பரிசோதனை நிலையத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமாக 100 கிராம் விதையினை கொடுத்து, பரிசோதனை கட்டணமாக ரூ.80/- மட்டும் செலுத்தி முளைப்புத்திறன் பரிசோதனை செய்து கொள்ளலாம்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**

மூத்த வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், ஒருங்கிணைந்த விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத்துறை வளாகம், மாவட்ட தொழில் மையம் அருகில், மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம், நாகப்பட்டினம் - 611 003.

எனவே தாளடி சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் அனைவரும் நெல் விதைகளை முளைப்புத் திறன் பரிசோதனை செய்து விதைப்பதன் மூலம் அதிகளவில் மகசூல் பெற்று அதிக லாபம் பெறலாம் என நாகப்பட்டினத்திற்கான தஞ்சாவூர் சரக விதைபரிசோதனை அலுவலர் து.சிவவீரபாண்டியன் மற்றும் நாகப்பட்டினம் விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் அ,அமுதாதேவி மற்றும் செ.பிரசன்னா தெரிவித்துள்ளனர்.

# சிறுதானியப் பயிர்களில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சி

மதுரை, செப்.25

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் கொண்டையம்பட்டி கிராமத்தில் 25.09.26ம் தேதி அன்று சிறுதானியப் பயிர்களில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் அலங்காநல்லூர் TNIAMP பசுமை உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் உள்ள 20 குழு விவசாயிகள் கலந்து கொண்டனர். அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன், சிறுதானியப் பயிர்களில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பின் முக்கியத்துவம் அதன் நன்மைகள் குறித்தும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருட்களின் மானிய விவரங்கள் மற்றும் விவசாயி களின் தனித்துவ அடையாள எண் (Farmer Registry) பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், நுண்ணீர்ப் பாசன திட்டம், மத்திய மாநில அரசின் மூலமாக கிடைக்கும் மானியத் திட்டங்கள் பற்றி எடுத்துக்கூறி அனைவரையும் வரவேற்றார்.

நடமாடும் மண்பரிசோதனை நிலைய ஆய்வகத்தின் வேளாண்மை அலுவலர் ஜோஸ்பின் நிர்மலா, சிறுதானியப் பயிர்களான கம்பு, சோளம், தினை, குதிரை வாலி, சாமை, ராகி, வரகு பயிர்களில் இருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு முறைகள், அதன் பயன்பாடுகள், சிறுதானியப் பயிர்கள் நிலத்தின் உற்பத்தி திறனை மேம்படுத்தவும், சுற்றுப்புற சூழ்நிலை நட்பு தன்மை, உணவு பாதுகாப்பிற்கும் ஆரோக்கியத் திற்கும் முக்கியமானவை, உடல் எடை கட்டுப்பாடு, நீரிழிவு நோய் கட்டுப்பாடுகள், கால்நடை தீவனங்கள், சிற்றுண்டி உணவு, நோய் எதிப்பு சக்தியை அதிகரித்தல் போன்ற சிறுதானியப் பயிர்களின் நன்மைகள் குறித்து எடுத்துரைத்தார்.

மேலும் கூறியதாவது மண்மாதிரி எடுத்தல், மண் பரிசோதனை, மண் பரிசோதனை முக்கியத்துவம், மண்வளம் மேம்பாடு, சமச்சீர் உர மேலாண்மை, உயிர் உரங்களின் பயன்கள் பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்களின் பயன் பாடுகள் அதனை தயாரிக்கும் முறை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

தழைச்சத்து, சாம்பல் சத்து, மணிச்சத்து முறைகள், இரண்டாம் துணை நிலை சத்துக்கள், நுண்ணூட்டச்சத்துகள் எவ்வாறு பயிர்களுக்கு இடுவது பற்றியும் அதன் பயன்பாட்டு நன்மைகள் குறித்த தொழில்நுட்பங்கள், ஊட்டச்சத்து பற்றாக்குறைகள் மற்றும் அதன் நிவர்த்தி முறைகள், பசுந்தாள் உரமிடுதல் பயன் பாடுகள், இயற்கை திரவ உயிர் உரங்களான திரவ அசோஸ் பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம் ஆகியவற்றினை பயன்படுத்துமாறும் குறைந்த செலவில் அதிக மகசூல் பெற்றிட லாம் என தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்து விவசாயிகள் கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் உரிய விளக்கமளித்தார்.

பயிற்சியின் முடிவில் நடமாடும் மண்பரிசோதனை நிலைய ஆய்வகத்தின் மூலமாக விவசாயிகளிடமிருந்து மண்மாதிரிகள் சேகரித்து மண் பரிசோதனை செய்யப்பட்டு மண்மாதிரி முடிவுகள் விவசாயி களுக்கு வழங்கப்பட்டது.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உரையாற்றிய அலுவலர்களுக்கும் அலங்காநல்லூர் வட்டார தொழில்நுட்ப மேலாளர் வேல்முருகன் நன்றி கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சௌந்தரராஜன் மற்றும் வசந்தி ஆகியோர் செய்திருந்தனர்.



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கரிமக்கழிவு உயிரி மதிப்புக் கூடத்தை பார்வையிட்ட மாநகராட்சி ஆணையர்

கோயம்புத்தூர், செப்.25

கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் கட்டாரவிதேஜா, தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பூச்சியியல்





துறையில் அமைக்கப்பட்டு உள்ள கருப்பு ஈ மூலம் கரிமக் கழிவுகளை உயிரி மதிப்புக்கூட்டல் செய்யும் தானியங்கி செயலாக்க அமைப்பை பார்வையிட்டார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக செயல் துணைவேந்தர் முனைவர் மு.ரவீந்திரன், கருப்பு ஈயைப் பயன்படுத்துவதன் பல்வேறு நன்மைகளை எடுத்துரைத்தார். கருப்பு ஈ என்பது சிதைவுறும் கரிமக்கழிவுகளை சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் உண்டு அழிக்கும் ஒரு பூச்சியாகும். அதேவேளையில், மனிதர்கள், விலங்குகள் மற்றும் தாவரங்கள் உள்ளிட்ட பிற உயிரினங்களுக்கு இது தீங்கு விளைவிப்ப தில்லை. இந்தப் பூச்சி கரிமக்கழிவுகளை வேகமாக சிதைவுச் செய்வதால் அருவருக்கத்தக்க மணம் வீசுவதில்லை.

இந்த செயல் முறையின் முக்கியப் பயன்களாக, புரதம் நிறைந்த கருப்பு ஈ வளர்ந்த புழுக்கள் கிடைக்கின்றன. இவைெ சல்லப்பிராணிகள், பறவைகள், மீன்கள் போன்றவற்றிற்கான தீவனமாகப் பயன்படுத்தப்படலாம். மேலும், இப்புழுக் களிலிருந்து பெறப்படும் எண்ணெய்கள் போன்ற துணைப் பொருட்கள் தொழில் துறைகளில் பயன்படுத்தப்படுகின்றன. இறுதியாக, தாவரங்களை வளர்ப்பதற்கு நேரடியாகப் பயன் படுத்தக்கூடிய, ஊட்டச்சத்துக்கள் நிறைந்த கரிம உரம் கிடைக்கிறது.

வீடுகள் மற்றும் பிற இடங்களில் தினந்தோறும் கணிசமான அளவில் கரிமக்கழிவுகள் உருவாகின்றன என்பதைக் கருத்தில் கொண்டு, நகர்ப் புறக்கழிவு மேலாண்மை மையங்களில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு அதிக வாய்ப்புள்ளதாக செயல் துணைவேந்தர் கோவை மாநகராட்சி ஆணையருக்கு விளக்கமாக தெரிவித்தார். மேலும், நகர்ப்புற கரிமக்கழிவு மேலாண்மைக்காக இத்தொழில்நுட்பத்தை விரிவுபடுத்து வதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் வாய்ப்புகள் குறித்தும் அவர் கலந்துரையாடினார்.

பின்னர், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் தேஜா, தற்போது உருவாக்கப்பட்டுள்ள மாதிரி அமைப்பை, எதிர் காலத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சியால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான சாத்தியத்தை கருத்தில் கொண்டு, ஒவ்வொரு மாநகராட்சி மண்டலத்திலும் தினமும் உருவாகும் குறைந்தபட்சம் மூன்று டன் கரிமக் கழிவுகளைச் செயலாக்கும் திறன் கொண்டதாக இருக்க வேண்டும்என்று தெரிவித்தார்.

மேலும், இந்த சுற்றுச்சூழலுக்கு உகந்த உத்தியை செயல் படுத்துவதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப அறிவும் அதன் பட்டதாரிகளின் திறனும் சிறப்பாகப் பயன்படுத்தப்படலாம் என்றும் ஆணையர் குறிப்பிட்டார். நகர்ப்புறங்களில் இருந்து பெறப்படும் பல்வேறு வகையான கரிமக்கழிவு கலவைகளைப் பயன்படுத்தி, இந்த மாதிரி அமைப்பில் சோதனை அடிப்படையிலான செயல்பாட்டை மேற்கொண்டு, இத்தொழில்நுட்பத்தை நகர்ப்புறக் கழிவு மேலாண்மையில் ஏற்றுக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்யுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

TNAU–வின் பயிர்ப் பாதுகாப்பு மையத்தின் இயக்குநர் முனைவர் மூ.சாந்தி, நகர்ப்புற கரிமக்கழிவுகளை முன் செயலாக்கம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் பல்வேறு நிலைகள் குறித்தும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் தற்போது நிறுவப்பட்டுள்ள பகுதி–தானியங்கி செயலாக்க அமைப்பின் பல்வேறு கூறுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்தும் ஆணையருக்கு விளக்கினார்.

மேலும், தொழிலாளர்களின் தேவையைக் குறைக்கும் நோக்கில் நிறுவப்பட்டுள்ள IoT தொழில்நுட்ப உத்திகள் மற்றும் எதிர்காலத்தில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள கூடுதல் தானியக்க நடவடிக்கைகள் குறித்தும் இயக்குநர் விளக்கினார். வேளாண் பூச்சியியல் துறை பேராசிரியரும் துறைத் தலைவருமான முனைவர் மு.முருகன், இச்செயல்முறையை விரிவுபடுத்துவது தொடர்பான நடைமுறை செயல்பாடுகளை மாநகராட்சி ஆணையருக்கு தெரிவித்தார். கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டல உதவி ஆணையர் எஸ்.நர்மதா, வேளாண் பூச்சியியல் துறையைச் சேர்ந்த திட்ட விஞ்ஞானிகள் முனைவர் க.செங்குட்டுவன் மற்றும் முனைவர் மு.அழகர் ஆகியோரும் இந்தநிகழ்வில் கலந்து கொண்டனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# இலைவழி உரம் / பூச்சி மருந்து தெளிப்பில் ஒட்டும் திரவம் (STICKER) சேர்ப்பது தேவையா?




இலைவழி தெளிப்பில் (FOLIAR SPRAY) அவசியமாக ஒட்டும் திரவத்தை (STICKER / ADHESIVE LIQUID) சேர்க்க வேண்டும். எடுத்துக்காட்டாக வாழை போன்ற தாவரங்களில் இலைகள் பரப்பில் மெழுகு போன்ற பூச்சுடன் காணப்படும். இதன் மேலே தெளிக்கப்படும் எந்த ஒரு திரவமும் ‘தாமரை இலையில் உள்ள நீர் திவலைகள் போன்றே, இலைமேல் பட்டும் படாமல் வீரயமாகும். இதற்கு காரணம் தண்ணீர் பரப்பின் இழு விசை காரணமாகும். இதைத்தவிர்ப்பதற்கு தகுந்த ஒட்டும் பசை/ திரவத்தை சேர்த்து இலைமேல் தெளிக்க வேண்டும்.

**ஒட்டும் திரவம் (STICKING AGENT)?**

ஒட்டும் திரவம் என்பது பயிர்களுக்கு மருந்து/உரங்களை இலைவழியாக தெளிக்க உதவும். அந்த திரவம் இலைகளின் மீது நன்றாக ஒட்டிக்கொண்டு எளிதில் வழியாமல் இருக்க பயன்படும்.

**செயல்திறன் எப்படி?**

இந்த ஒட்டும் திரவமானது, தண்ணீரின் மூலக்கூறு (MOLECULES) யையும் இலைகளின் மேல் உள்ள மெழுகின் மூலக் கூறையும் பிணைக்கும் சங்கிலியாகக் செயல்பட்டு, (தெளிப்பு) திரவம் வழிந்து (உருண்டு) ஓடி விடாமல் தடுக்கிறது. இதனால் தெளிப்பு திரவம் விரயமாவது தடுக்கப்படுகிறது.

**எத்தகைய ஒட்டும் திரவத்தை பயன்படுத்த வேண்டும்**

ஒட்டும் திரவத்தின் பங்கு இன்றியமையாதது, தரமும் செயல் திறனும் நன்றாக இருக்க வேண்டும். இல்லையேல் நாம் தெளிப்பிற்கு பயன்படுத்தும் வேளாண் இடுபொருட்களின் பயன்பாட்டை பாழ்படுத்தி விடும். ஆகவே ஒட்டும் திரவத்திற்கு பதிலாக கண்ட கண்ட சோப்பையோ, சாம்பூ போன்றவை பயன்படுத்திட கூடாது.

தரமான அயனித்தன்மையற்ற ( NON - IONIC SURFACTANTS) ஒட்டும் திரவமாக பயன்படுத்திட வேண்டும்.

டிக், NGSNB80, SHREE, EMULSIFIERS பயன்படுத்தலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# தொகுப்பு கிராம திட்டத்தின் கீழ் விதை உற்பத்தி வயல் ஆய்வு



கடலூர், செப்.25

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம், சார்பாக 24.09.26 அன்று மங்களூர் வட்டாரம், கொளவாய், கீழ்ஒரத்தூர் மற்றும் அசகளத்தூர் ஆகிய கிராமத்தில் தொகுப்பு கிராம திட்டத்தின் கீழ் VRI 10 நிலக்கடலை விதை உற்பத்தி வயல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், தலைமையில் விஞ்ஞானி முனைவர் கோ.சத்தியநாரயணன், தொழில்நுட்ப அலுவலர், சாமூண்டீஸ்வரன், ஆகியோர் அடங்கிய குழு 10 மேற்பட்ட விதை உற்பத்தி வயல்களை ஆய்வு செய்து, விதை உற்பத்தியாளர்களுக்கு தேவையான தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தார்.

மேலும் விதை உற்பத்தி வயல்களில் மேற்கொள்ளவேண்டிய இனத்தூய்மை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தி லிருந்து வெளியிடப்பட்ட புதிய இரகங்கள், நிலக்கடலை பயிர் களுக்கு தேவையான வேளாண் தொழில்நுட்பங்களை பற்றி விதை விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

# தென்னைக்கு உர மேலாண்மை
# அதிக மகசூலுக்கு சரியான உரமிடுதல்

தென்னை சாகுபடியில் மகசூலை அதிகரிக்க உர மேலாண்மை மிகவும் முக்கியம். மண்ணின் தன்மை, மரத்தின் வயது, பாசன வசதி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உரமிடுவதன் மூலம் மரத்தின் வளர்ச்சியையும் காய்ப்புத் திறனையும் மேம்படுத்தலாம்.



தென்னை மரத்திற்கு தேவையான பேரூட்டச்சத்துகளான தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவை சரியான அளவில் கிடைக்க வேண்டும். இதனுடன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் போன்ற இயற்கை உரங்களையும் பயன்படுத்துவது மண் வளத்தைப் பாதுகாக்க உதவும்.

### ஆண்டுக்கு எவ்வளவு உரம்?

நன்கு வளர்ந்த காய்ப்புத் தென்னை மரம் ஒன்றுக்கு ஆண்டுக்கு பொதுவாக 50 கிலோ தொழு உரம் அல்லது கம்போஸ்ட், 1.1 கிலோ யூரியா, 2 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 2 கிலோ பொட்டாஷ் போன்ற உரங்களைப் பயன்படுத்தலாம். இருப்பினும், மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் உர அளவை நிர்ணயிப்பதே சிறந்தது.

### உரத்தை எவ்வாறு இட வேண்டும்?

தென்னை மரத்தின் தண்டுக்கு அருகிலேயே உரத்தை குவித்து இடக்கூடாது. மரத்தைச் சுற்றி சுமார் 1.5 முதல் 2 மீட்டர் தள்ளி வட்டப்பாத்தி அமைத்து, அதில் உரத்தை சீராகப் பரப்ப வேண்டும். உரத்தை மண்ணின் மேற்பரப்பில் மட்டும் வைத்து விடாமல், மண்ணின் மேல் அடுக்குடன் லேசாகக் கலந்து பின்னர் பாசனம் செய்ய வேண்டும். இதன் மூலம் உரச்சத்துகள் வேர்களுக்கு எளிதில் கிடைக்க வாய்ப்புள்ளது. மிகவும் வறண்ட நிலையில் உரமிடுவதைத் தவிர்க்க வேண்டும். மண்ணில் போதுமான ஈரப்பதம் இருக்கும் நேரத்தில் உரமிடுவது நல்லது. உரமிட்ட பிறகு பாசனம் செய்வதும் அவசியம்.

### ஒரே தவணையில் உரமிட வேண்டாம்

ஆண்டுக்குத் தேவையான உரத்தை ஒரே முறையில் அதிக மாக இடுவதற்குப் பதிலாக, பருவநிலை மற்றும் பாசன வசதிக்கு ஏற்ப பல தவணைகளாகப் பிரித்து இடுவது பயனுள்ளதாக இருக்கும். மழை தொடங்கும் காலத்திலும், அதன்பின் பாசன வசதிக்கு ஏற்ப மற்றொரு தவணையிலும் உரமிடலாம். சொட்டுநீர் பாசனம் உள்ள தோப்புகளில், நீர் மற்றும் உர மேலாண்மையை ஒருங்கிணைத்து மேற் கொள்ளலாம்.

### தொழு உரம் முக்கியம்

ஒரு வளர்ந்த மரத்திற்கு ஆண்டுக்கு சுமார் 50 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் பயன்படுத்தலாம். இது



மண்ணின் இயற்பியல் தன்மையை மேம்படுத்தி, மண்ணில் ஈரப்பதத்தைத் தக்கவைக்க உதவுகிறது. தென்னை ஓலை, மட்டை போன்றவற்றை தோப்பிலேயே மக்கச் செய்து, மரத்தைச் சுற்றி மூடாக்காக பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்கலாம்.

## இளம் தென்னைக்கு கவனம்

நடவு செய்த உடனேயே வளர்ந்த மரத்திற்கான முழு உர அளவை இளம் தென்னைக்கு வழங்கக்கூடாது. மரத்தின் வயது மற்றும் வளர்ச்சிக்கு ஏற்ப உர அளவை படிப்படியாக அதிகரிக்க வேண்டும். முதல் மூன்று ஆண்டுகளில் மரத்தின் வேர் மற்றும் குருத்து நன்றாக வளர்வதற்கு ஏற்ற ஊட்டச்சத்து மேலாண் மையை மேற்கொள்ள வேண்டும். காய்க்கத் தொடங்கிய பின்னர் மரத்தின் தேவைக்கேற்ப உர அளவை அதிகரிக்கலாம்.

## மர வயதுக்கேற்ப உரம் மற்றும் தொழு உரம்

தென்னை சாகுபடியில் மரத்தின் வயதுக்கு ஏற்ப உரம் மற்றும் தொழு உரத்தின் அளவை படிப்படியாக அதிகரித்து வழங்குவது அவசியம். மண் வளம், பாசன வசதி மற்றும் மரத்தின் வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உர மேலாண்மையை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு வயது தென்னைக்கு ஆண்டுக்கு ஒரு மரத்திற்கு சுமார் 10 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் வழங்கலாம். இதனுடன் 308 கிராம் யூரியா, 500 கிராம் சூப்பர் பாஸ்பேட் மற்றும் 480 கிராம் பொட்டாஷ் வழங்கலாம். நடவு செய்த உடனேயே முழு அளவு ரசாயன உரங்களை இடாமல், நாற்றின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப உரமிடுவது அவசியம்.

இரண்டு வயது தென்னைக்கு ஆண்டுக்கு ஒரு மரத்திற்கு 20 கிலோ தொழு உரம் அல்லது கம்போஸ்ட், 616 கிராம் யூரியா, ஒரு கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 960 கிராம் பொட்டாஷ் வழங்கலாம். இந்தப் பருவத்தில் மரத்தின் வேர் மற்றும் இலை வளர்ச்சி அதிகரிப்பதால், முதல் ஆண்டைவிட ஊட்டச்சத்து தேவை அதிகரிக்கிறது.

மூன்று வயது தென்னைக்கு ஒரு மரத்திற்கு ஆண்டுக்கு 30 கிலோ தொழு உரம் அல்லது கம்போஸ்ட், 924 கிராம் யூரியா, 1.5 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 1.44 கிலோ பொட்டாஷ் வழங்கலாம். இந்தப் பருவத்தில் மரம் வேகமாக வளர்ந்து காய்ப்புக்குத் தயாராகி வருவதால், முறையான உர மேலாண்மை மிகவும் முக்கியமானதாகும்.

நான்கு வயது தென்னைக்கு ஆண்டுக்கு ஒரு மரத்திற்கு 40 கிலோ தொழு உரம் அல்லது கம்போஸ்ட், சுமார் 1.23 கிலோ யூரியா, 2 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 1.92 கிலோ பொட்டாஷ் வழங்கலாம். நான்காம் ஆண்டில் மரத்தின் வளர்ச்சி மற்றும் காய்ப்புத் திறன் அதிகரிக்கத் தொடங்குவதால், போதுமான ஊட்டச்சத்து கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

ஐந்து வயது மற்றும் அதற்கு மேற்பட்ட காய்ப்புத் தென்னைக்கு ஆண்டுக்கு ஒரு மரத்திற்கு 50 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட், சுமார் 1.3 கிலோ யூரியா, 2 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 2 கிலோ பொட்டாஷ் வழங்கலாம். இந்த அளவு காய்ப்புத் தென்னைக்கான பொதுவான பரிந்துரையாகும். தோட்டத்தின் மண் வளம் மற்றும் மண் பரிசோதனை முடிவுக்கு ஏற்ப உர அளவில் மாற்றம் செய்யலாம்.

### உரம் இடும் முறை

உரத்தை தென்னை மரத்தின் தண்டுக்கு அருகில் குவித்து இடக்கூடாது. மரத்தைச் சுற்றி சுமார் 1.5 முதல் 2 மீட்டர் தள்ளி வட்டப்பாத்தி அமைத்து, அதில் தொழு உரம் மற்றும் ரசாயன உரங்களைச் சீராகப் பரப்ப வேண்டும். பின்னர் மண்ணின் மேல் அடுக்குடன் லேசாகக் கலந்து பாசனம் செய்ய வேண்டும். மண்ணில் போதுமான ஈரப்பதம் இருக்கும் நேரத்தில் உரமிடுவது சிறந்தது.

ஆண்டுக்குத் தேவையான உரத்தை ஒரே தவணையில் இடுவதற்குப் பதிலாக, பருவநிலை மற்றும் பாசன வசதிக்கு ஏற்ப இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளாகப் பிரித்து வழங்கலாம். பொதுவாக மழைக்காலத்தை ஒட்டி ஒரு தவணையும், பின்னர் மற்றொரு தவணையிலும் உரமிடலாம். பாசன வசதி உள்ள தோட்டங்களில் தேவைக்கேற்ப உரத்தை சிறு தவணைகளாகப் பிரித்து வழங்குவதன் மூலம் ஊட்டச்சத்து பயன்பாட்டை மேம்படுத்தலாம்.

## தென்னையில் நுண்ணூட்டச்சத்து கலவை பயன்படுத்தும் முறை

தென்னை மரத்தின் வளர்ச்சி, காய்ப்பு மற்றும் காய் தரத்திற்கு துத்தநாகம், இரும்பு, மாங்கனீசு, போரான், செம்பு, மக்னீசியம் போன்ற நுண்ணூட்டச்சத்துகள் அவசியம். குறிப்பாக மண் பரிசோதனையில் குறைபாடு இருப்பது தெரியவந்தால் நுண்ணூட்டச் சத்து மேலாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

தென்னை ரகங்கள் மற்றும் ஹைபிரிட் ரகங்களில் நுண்ணூட்டச்சத்து குறைபாட்டைத் தவிர்க்க, TNAU நுண்ணூட்டச்சத்து கலவையை ஒரு மரத்திற்கு ஆண்டுக்கு 1 கிலோ என்ற அளவில் மண்ணில் இடலாம். இதனை நேரடியாக வேரில் போடாமல், 1 கிலோ நுண்ணூட்டச்சத்து கலவையுடன் 10 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்தை கலந்து, ஈரப்பதத்துடன் சுமார் 30 நாட்கள் மக்கவைத்து பின்னர் மரத்தைச் சுற்றி மண்ணில் இடலாம்.

### தொழு உரமும் அவசியம்

விவசாயிகள் மண்ணின் வளத்தைப் பாதுகாக்க ஒரே வகை இயற்கை உரத்தை மட்டும் நம்பாமல், பல்வேறு இயற்கை வளங்களை ஒருங்கிணைத்து பயன்படுத்தலாம். தொழு உரத்துடன் கம்போஸ்ட், மண்புழு உரம், தென்னை கழிவுகளில் தயாரிக்கப்படும் கம்போஸ்ட் மற்றும் பசுந்தாள் உரங்களையும் பயன்படுத்துவது மண்ணின் வளத்தை மேம்படுத்த உதவும். சணப்பை, தக்கைப்பூண்டு போன்ற பசுந்தாள் பயிர்களை வயலில் வளர்த்து, உரிய பருவத்தில் அவற்றை மண்ணில் மடக்கி உழுவதன் மூலம் மண்ணுக்கு இயற்கையான அங்ககச் சத்து கிடைக்கச் செய்யலாம்.

### வேர் வளர்ச்சிக்கு உயிர் உரங்கள்

பயிர்களின் வேர் வளர்ச்சியையும், மண்ணிலுள்ள ஊட்டச் சத்துகளை பயிர்கள் சிறப்பாக எடுத்துக்கொள்ளவும் உயிர் உரங்களை பயன்படுத்தலாம். ஒரு மரத்திற்கு அசோஸ் பைரில்லம் 50 கிராம், பாஸ்போபாக்டீரியா 50 கிராம் அல்லது அசோபாஸ் 100 கிராம் மற்றும் வி.ஏ.எம். 50 கிராம் என்ற அளவில் தொழு உரம் அல்லது கம்போஸ்டுடன் கலந்து பயன்படுத்தலாம்.

இந்த உயிர் உரக் கலவையை 6 மாதங்களுக்கு ஒருமுறை பயன்படுத்துவது பயனுள்ளதாக இருக்கும் .முக்கியமாக, உயிர் உரங்களை ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளுடன் நேரடியாகக் கலந்து பயன்படுத்தக் கூடாது.

தென்னை ஓலை, மட்டை போன்ற தோட்டக் கழிவுகளை மக்கச் செய்து, மரத்தைச் சுற்றி மூடாக்காகப் பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்கலாம். இதனால் மண்ணில் கரிமப் பொருள் அதிகரித்து, வேர்களின் வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும்.

மண் பரிசோதனை செய்து, அதன் முடிவுக்கு ஏற்ப உரமிடுவதுடன், போதுமான பாசனம், இயற்கை உரம் மற்றும் மூடாக்கு ஆகியவற்றையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தினால் தென்னை மரத்தின் ஆரோக்கியத்தையும் மகசூலையும் மேம்படுத்த முடியும்.

தகவல் : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர்.***

## தலைக் கவசம் உயிர்க் கவசம்
## முறையாக தலைக் கவசம் அணிவோம்



# அயோத்தியாபட்டிணம் வட்டார விவசாயிகளுக்கு மக்காச்சோள பயிர் சாகுபடி குறித்து முக்கிய அறிவிப்பு

சேலம், செப்.25

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டார விவசாயிகள் மானிய விலையில் மக்காச்சோள விதைகளை பெற்று பயனடைய வேளாண்மை உதவி இயக்குநர் ப.சண்முகப்பிரியா முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

விவசாயத்தில் மக்காச்சோள பயிர் குறுகிய காலத்தில் நிறைவான மகசூலுடன் கணிசமான இலாபமிட்டும் ஒரு முக்கிய பயிராகும். அயோத்தியபட்டிணம் வட்டாரத்தில் பெருமளவு சாகுபடி செய்யப்பட்டு வரும் இப்பயிர், குறுகிய கால பயிர் என்பதால் பாசன நீர் குறைவாக இருக்கும் வயல்களுக்கும் மிகவும் ஏற்றது. தற்போது தமிழக அரசின் வேளாண்மை துறை மூலம் தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் திட்டத்தின் கீழ் மக்காச்சோள செயல்விளக்கத் திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு மானிய விலையில் அட்வென்டா 752 (Adventa) வீரிய ஒட்டு ரக மக்காச்சோள விதைகள், உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே இந்த நல்வாய்ப்பை பயன்படுத்தி மக்காச்சோளம் சாகுபடி செய்ய விரும்பும் அயோத்தியாபட்டிணம் வட்டார விவசாயிகள் உடனடியாக அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தையோ அல்லது தங்கள் பகுதி வேளாண்மை அலுவலர்களையோ அணுகலாம். தங்களுக்கு தேவையான விதைகளைப் பெற விவசாயிகள் தங்களது ஆதார் அட்டை நகல் மற்றும் கணினி சிட்டா ஆகியவற்றை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளுமாறு அயோத்தியாப்பட்டிண வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.சண்முகப்பிரியா கொண்டுள்ளார்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

**Office**
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

**Factory**
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்

கோயம்புத்தூர், செப்.25

கோயம்புத்தூர் மாவட்டம், சோமையம்பாளையம் கிராமத்தில் இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி சரவணன் தலைமை வகித்தார். மேலும் கே.வி.கே. எஸ்.எம்.எஸ். சுகந்தி மற்றும் வேளாண்மை அலுவலர் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்கோ கள அதிகாரி சரவணன் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா திரவ உரங்களை பயன்படுத்துவதால் பெறும் நன்மைகள் மற்றும் இத்திரவ உரங்களை இலைவழி தெளிப்பு முறையில் பயன்படுத்தும் முறை குறித்து விவரித்தார்.




குருணை உரங்களைவிட விலை குறைவு, எடுத்து செலவும் சுலபம். மேலும், நானோ உரங்களை ட்ரோன் மூலம் தெளிக்கும் தொழில்நுட்பம் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. குறைந்த நேரத்தில், குறைந்த செலவில், துல்லியமாக உரங்களை தெளிக்க கிசான் ட்ரோன் எவ்வாறு பயன்படுகிறது என்பதையும், எதிர்கால வேளாண்மையில் இது முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

மேலும், இப்கோ சங்கட ஹரன் பீமா யோஜனா காப்பீடு திட்டம் – நானோ உரங்கள் வாங்கும் விவசாயிகளுக்கு ரூ.2,00,000 வரை விபத்துக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பது குறித்தும் விவரிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்டஅனைத்து விவசாயிகளுக்கும் தங்கள் பயிர்களில் இனி இப்கோ நானோ உரங்களை பயன்படுத்துவோம் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# விவசாயிகளுக்கு ஆமணக்கு சாகுபடியினை ஊக்குவிக்க வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

திருச்சி, செப்.25

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சுமார் 500 எக்டர் பரப்பளவில் விவசாயிகள் ஆமணக்கு சாகுபடி செய்து வருகின்றனர். 2026-27-ஆம் ஆண்டு தேசிய உண்ணத்தகு எண்ணெய் இயக்கம் - எண்ணெய் வித்துக்கள் திட்டத்தின் கீழ் ஆமணக்கு செயல்



விளக்கத் திடல் அமைத்திட இம்மாவட்டத்திற்கு 16 இலட்சம் நிதி இலக்கீடு பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் முசிறி, தா.பேட்டை மற்றும் தொட்டியம் வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆமணக்கு செயல்விளக்கத்திற்கு கலப்பின விதை (ICH 5), உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப் பாட்டு காரணிகள், வறட்சியை தாங்கி வளர ஏதுவாக நுண் ணுயிர் உரம் (PPFM), வரிசை நடவு மற்றும் அறுவடை செலவு களுக்கு ஒரு எக்டருக்கு ரூ.8000/- மானியம் வழங்கப்படுகிறது.

விவசாயிகள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி கீழ்க்காணும் விவரப்படி, மானாவாரி மற்றும் இறவை நிலங்களில் ஏற்ற இரகங்கள், சரியான உரமிடல் முறை மற்றும் ஊடுபயிர் தொழில் நுட்பங்கள் மூலம் ஆமணக்கு மகசூலை அதிகரிக்கலாம்.

## நிலம் தயாரித்தல் மற்றும் நடவு முறை

அமில நிலங்களைத் தவிர பிற அனைத்து நிலங்களிலும் ஆமணக்கு பயிரிடலாம். பயிரிடும் நிலத்தினை இரண்டு மூன்று முறை உழவு செய்ய வேண்டும். இரகங்களுக்கு 90 X 60 செ.மீ. (மானாவாரி) அல்லது 90 X 90 செ.மீ. (இறவை) இடைவெளியும், கலப்பினங்களுக்கு 120 X 90 செ.மீ. (மானாவாரி) அல்லது 150 X 120 செ.மீ. (இறவை) இடைவெளியும் நடவு செய்யப்படுகிறது. விதைகளை 4 - 6 செ.மீ. ஆழத்தில் குழிக்கு ஒன்று வீதம் விதைப்பு செய்ய வேண்டும். 1 கிலோ விதைக்கு 2 கிராம் கார்பென்டாசிம் கலந்து நான்கு மணி நேரத்திற்கு பிறகு விதைக்கவும். விதைப்பு செய்த 15-ஆம் நாள் குழிக்கு ஒரு செடி வீதம் பயிர் கலைத்து விடுபட்ட இடங்களில் நடவு செய்து பயிர் எண்ணிக்கையினை பராமரித்தல் வேண்டும்.

## சாகுபடி பருவம்

மானாவாரி பயிராக ஆடி பட்டத்திலும், இறவை பயிராக வைகாசி மற்றும் கார்த்திகை பட்டத்திலும் தோட்ட வரப்பில் பல்லாண்டு பயிராக சாகுபடி செய்யலாம்.

## உர நிர்வாகம்

| உர அளவு (கிலோ / எக்டர்) | யூரியா | சூப்பர் பாஸ்பேட் | பொட்டாஷ் |
|---|---|---|---|
| இரகங்கள் (மானாவாரி) | 65 | 94 | 25 |
| வீரிய ஒட்டு இரகங்கள் (இறவை) | 163 | 188 | 25 |

மேலே பரிந்துரைக்கப்பட்டபடி மானாவாரி பயிருக்கு கிடைக்கும் மழையைப் பொறுத்து யூரியாவை மூன்றாக பிரித்து அடியுர மாகவும், விதைத்த 35 மற்றும் 75 -வது நாளில் மேலுரமாகவும் செடிக்கு அரை அடி தூரத்தில் இட்டு மண்ணை கிளறிவிடவும். இறவை பயிருக்கு யூரியாவை நான்காகப் பிரித்து அடியுரம், 35, 75 மற்றும் 105-வது நாளில் இட வேண்டும். சூப்பர் பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் சத்துக்களை அடியுரமாக இட வேண்டும். இத்துடன் 20 கிலோ மெக்னீசிய சல்பேட்டையும் சேர்த்து இட வேண்டும்.

**நுண்ணூட்டச்சத்து**

தழை மணி, சாம்பல் மற்றும் மெக்னீசிய சத்துக்களை தவிர ஆமணக்கு பயிருக்கு துத்தநாகச் சத்து இடுவது மகசூலை அதிகரிக்கிறது. துத்தநாகச் சத்து குறைபாடு உள்ள நிலங்களில் 5 கிலோ துத்தநாக சல்பேட்டை 45 கிலோ மணலுடன் கலந்து இட வேண்டும். இப்பயிருக்கு தாமிரச் சத்து இடுவது நோய் எதிர்ப்பு திறனை அதிகரிக்கின்றது.

**களை மேலாண்மை**

விதைப்பு செய்த மூன்றாம் நாள் களை முளைக்கும் முன் பென்டிமெத்தாலின் 3 லிட்டர் / எக்டர் வீதம் தெளிக்க வேண்டும். விதைத்த 20 மற்றும் 40-ஆம் நாட்களில் கைக்களை எடுக்க வேண்டும்.

**ஊடுபயிர் முறை**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நிலக்கடலை பரவலாக பயிரிடப்படுவதால் ஒவ்வொரு 6-வது வரிசை நிலக்கடலைக்கும் இடையே ஒரு வரிசை ஆமணக்கு பயிரிடலாம். பருவ மழை தாமத மானால் உளுந்து + ஆமணக்கு 6: 1 விகிதத்திலும் பயிரிடலாம்.


**அறுவடை**

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முத்துக்கள் காய்ந்ததும் அறு வடை செய்யலாம். முற்றிய காய்களை மட்டும் பரித்து விதைகளை சூரிய ஒளியில் உளர்;த்தி குச்சியால் அடித்து பிரித்து எடுக்கவும்.

**மகசூல்**

மானாவாரி - 1600 கிலோ / எக்டர், இறவை - 3000 கிலோ / எக்டர்

எனவே, ஆர்வமுள்ள விவசாயிகள் தங்கள் பகுதி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தினை அணுகி பயன்பெறுமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333